பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 10 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியா — செக் குடியரசு இடையே பாதுகாப்புத் துறையில் ஒருங்கிணைந்து செயல்பட முடிவெடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

**2.** ரயில்வே, கடந்த மாதத்தில் **135** மில்லியன் டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளது.

**3.** இந்திய கடலோர காவல்படையில் நவீன இலகுரக ஹெலிகாப்டர் **CG-875** இணைக்கப்பட்டுள்ளது.

**4.** பல்கேரியாவுக்கு அருகே கருங்கடல் பகுதியில் இரண்டு கப்பல்கள் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

**5.** மலேசியா சூப்பர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tushar Suveer** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

இந்தியா — செக் குடியரசு இடையே பாதுகாப்புத் துறையில் ஒருங்கிணைந்து செயல்பட முடிவெடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செக் குடியரசு துணைப்பிரதமர் திரு **Karel Havlicek**-வுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர், சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுயசார்பு இந்தியா இயக்கத்தின் அடிப்படையில் ராணுவ தளவாடங்கள் வடிவமைக்கப்படும் என்றார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் வரலாற்று மற்றும் கலாச்சார அடிப்படையில் மேம்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலகளாவிய அமைதிக்கும், பாதுகாப்புக்கும் இந்தியாவும், செக் குடியரசும் ஒருங்கிணைந்து செயல்படும் என்றும் திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

நான்கு நாள் அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ள திரு **Karel Havlicek,** பெங்களூரு, மும்பை, தொழில் நிறுவன தலைவர்களுடன் கலந்துரையாட உள்ளார்.

<<<<<<<>>>>>>

மத்திய இணையமைச்சர் பதவியை டாக்டர் எல். முருகன் ராஜினாமா செய்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், பாரத மாதாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் சேவையாற்றியது தன் வாழ்வின் மிகப்பெரிய கௌரவமாக கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

2029-ஆம் ஆண்டு மக்களவை தேர்தலை முன்னிட்டு அடிமட்ட அளவில் களப்பணி ஆற்றவும், கட்சித் தொண்டர்களுடன் இணைந்து செயல்படவும், தமிழகத்தில் பிஜேபி-ஐ வலுப்படுத்துவதற்கும் முழுநேரமாக ஈடுபடுத்திக் கொள்ள விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் தேசம், அடுத்ததாக கட்சி, இறுதியாகவே சுயநலம் என்று தாம் கருதுவதாகவும், தமது பதவி விலகல் கடிதத்தில் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

ரயில்வே, கடந்த மாதத்தில் 135 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளது.

ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மாதத்தில் சரக்குகளை கையாள்வதில் ஆறு புள்ளி ஒன்று நான்கு சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

உணவு தானியம் கையாள்வதில் 25 சதவீத வளர்ச்சியும், நிலக்கரி சரக்கு போக்குவரத்தில் ஒன்பது சதவீத வளர்ச்சியும், சரக்கு பெட்டகம் கொண்டு செல்வதில் பத்து சதவீத வளர்ச்சியும் அடைந்துள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

இந்திய கடலோர காவல்படையில் நவீன இலகுரக ஹெலிகாப்டர் CG-875 இணைக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்ட்ரா மாநிலம் ரத்னகிரியில் இன்று நடைபெற்ற விழாவில், இந்த ஹெலிகாப்டர் இணைக்கப்பட்டது.

மேற்கு கடலோரப்பகுதியில் இந்திய கடலோர காவல்படையின் திறனை மேம்படுத்தும் பணியில், இந்த ALH-MK-3 ரக ஹெலிகாப்டர் பயனுள்ளதாக அமையும்.

இந்த நவீன ஹெலிகாப்டரில் ரேடார், இயந்திர துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

மகாராஷ்ட்ரா உள்ளிட்ட நாட்டின் மேற்குப்பகுதியில் கடல்சார் பாதுகாப்புக்கு இது வழிவகை செய்யும்.

கடலோர காவல்படையின் ரத்னகிரி **831 Squadron**-ல் மேலும் நான்கு **ALH-MK-3** ரக ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட உள்ளன.

<<<<<<<>>>>>>

இரண்டாயிரம் ரூபாய்க்கு மேலான **UPI** வணிக பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் செலுத்தும் முறை தீபாவளிக்கு பிறகு அமல்படுத்தப்பட உள்ளதாக தேசிய பணப்பரிவர்த்தனை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த ஆணையம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறியுள்ளது.

தனிநபர் மற்றொரு நபருக்கு மேற்கொள்ளும் **UPI** பரிவர்த்தனைகளுக்கு எந்த கட்டணமும் செலுத்தப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபாதை வியாபாரிகள் உட்பட சிறு வியாபாரிகள் மாதத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரை கட்டணம் இல்லாமல் **UPI** பரிவர்த்தனை செய்யலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான கடைசி தேதி வரும் 26-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்த மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ், தேர்தல் ஆணையம் இதற்கான கடைசி தேதியை நீட்டித்ததாக கூறியுள்ளார்.

இந்த புகார்கள் மீது வரும் நவம்பர் 10-ஆம் தேதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் நவம்பர் 16-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அனைத்து வாக்காளர்களும் வரைவு வாக்காளர் பட்டியலை பார்வையிட்டு, திருத்தங்கள் இருப்பின் தேர்தல் ஆணையத்தை அணுக வேண்டும் என்று திரு தேவேந்திர பட்நவிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த

இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில்.

**(Sound Byte — Voice — 88 Sec.)**

**VO)**

*சரக்கு மற்றும் சேவை வரி கடந்த **2017**-ஆம் ஆண்டு ஜூலை ஒன்றாம் தேதி அமல்படுத்தப்பட்டது.*

*நாட்டின் வரி சீர்திருத்தத்தில் இது முக்கிய மைல் கல்லாகும்.*

*மத்திய மற்றும் மாநில அரசுகளின் வரிகளை ஒருங்கிணைத்து கொண்டுவரப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி மூலம், ஒரே நாடு — ஒரே வரி என்ற இலக்கை எட்டியுள்ளது.*

*இதன்மூலம், நாட்டில் ஒருங்கிணைந்த வரி நெறிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.*

*சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சிலின் பரிந்துரைகள் வரி செலுத்துபவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.*

*கடந்த ஆண்டு வரை ஐந்து சதவீதம், **12** சதவீதம், **18** சதவீதம், **28** சதவீதம் ஆகிய நான்கு நிலையாக இருந்த சரக்கு மற்றும் சேவை*

வரி தற்போது ஐந்து சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்ற இரண்டு நிலையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற **Bloomberg** பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் திரு நரேந்திர மோடி, சரக்கு மற்றும் சேவை வரி மூலம், நாட்டின் வரி வசூல் எளிதாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற 58-ஆவது சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான வழக்குகளை பதிவு செய்வதற்கான உச்சவரம்பை ஐந்து கோடி ரூபாயாக உயர்த்துவதாக கூறியுள்ளார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஒரே பாரதம் — உன்னத பாரதம் என்ற பிரதமரின் தொலைநோக்கு பார்வை மூலம் பொருளாதார வளர்ச்சியடைய பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<<<<<<<>>>>>>

பல்கேரியாவுக்கு அருகே கருங்கடல் பகுதியில் இரண்டு கப்பல்கள் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் **15** மாலுமிகள் பயணித்ததாக பல்கேரிய பிரதமர் **Rumen Radev** தெரிவித்துள்ளார்.

இதில் ஐந்து பேர் காயமடைந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த தாக்குதலில் ஒரு கப்பல் நீரிழ் மூழ்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தூதரை அழைத்து இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கப்போவதாக பல்கேரியா தெரிவித்துள்ளது.

மேலும், இத்தகைய தாக்குதலை தடுக்க நேட்டோ படையின் உதவியை கேட்கப்போவதாக பல்கேரியா கூறியுள்ளது.

இந்த ட்ரோன் தாக்குதல் குறித்து ரஷ்யா எந்த தகவலும் வெளியிடவில்லை.

<<<<<<<>>>>>>

பாகிஸ்தானில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக கூறி, **Baluch** தேசிய இயக்கம் ஜெர்மனி நாட்டின் **Hannover**-ல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

பலுஜிஸ்தான் மாகாணத்தில் ராணுவப்படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

உலக நாடுகள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் **Baluch** தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் பயணியர் ரயில் விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந்தனர். காயமடைந்த **40-**க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கராச்சியிலிருந்து — பெஷாவர் நோக்கி சென்று கொண்டிருந்த **Rehman Baba** விரைவு ரயில் **Multan** அருகே விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து தொடர்பாக காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<<<>>>>>>

மலேசியா சூப்பர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tushar Suveer** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-15, 21-18** என்ற செட் கணக்கில், சக நாட்டு வீரர் **Bharat Raghav-**ஐ வென்றார்.

----------------

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் கடந்த மாதத்திற்கான சிறந்த கிரிக்கெட் வீரராக இந்திய அணித்தலைவர் சுப்மன் கில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடி ரன் குவித்த சுப்மன் கில் ஐந்தாவது முறையாக சிறந்த வீரராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனையாக இந்திய அணியின் ஷபாலி வர்மாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆசிய விளையாட்டு கிரிக்கெட் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று இந்தியா சார்பில் சிறப்பாக விளையாடிய ஷபாலி வர்மாவும் சிறந்த வீராங்கனையாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

---------------

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-17, 16-21, 21-19** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Natsuki Nidaira** -வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளர்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **22-20, 21-19** என்ற செட் கணக்கில் பிரான்சின் **Andre Merkle**-ஐ வென்றார்.

-------------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், தமிழகத்திற்கு எதிரான மூன்றாம் நாள் ஆட்டநேர இறுதியில் ராஜஸ்தான் இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு, 81 ரன் எடுத்துள்ளது.

ஜெய்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 274 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ராஜஸ்தான் முதல் இன்னிங்சில் 363 ரன் எடுத்தது.

<<<<<<<<END>>>>>>>